**காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம் (CRIWMP) - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (CRIWMP) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு பசுமை காலநிலை நிதியத்திற்கும் (GCF) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கும் (UNDP) இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய மானிய உடன்படிக்கையின் 17.01 (ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பன அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளனர்.

காலநிலை மாற்ற இடர் மற்றும் தாக்கங்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை பாதுகாக்க நீர் முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை ஊடாக உலர் வலயத்தில் உள்ள சிறு விவசாயிகளின் குறிப்பாக பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்வை மேம்படுத்தவும் எதிர்கொள்ளும் தன்மையை / நெகிழ்ச்சி தன்மையை அதிகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் (GOSL’s) தொலைநோக்கிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உலர்வலயத்தின் மூன்று ஆற்றுப்படுகைகளில் கிராமிய நீர்ப்பாசன முறைமைகளை விரிவாக்கம் செய்தலும் மேம்படுத்துதலும் மற்றும் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் விவசாய நடைமுறைகளினை அளவிடுதல், காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதை மேம்படுத்தல், பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆண்டு முழுவதும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு நீர் வழங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்வுகளை பரவலாக்கல், நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு விவசாயிகளின் வறட்சி மற்றும் வெள்ளம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகியவற்றை தக்க வைக்கும் திறனை மேம்படுத்துவதற்கு காலநிலை, நீரியல் மற்றும் எதிர்வுகூறல் அமைப்பினை வலுப்படுத்துதல் போன்ற நான்கு அலகுகளின் கீழ் செயற்திட்டத்தின் பணிகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

மானியஉடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,521.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 52.084 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 5,499.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியன் பசுமை காலநிலை நிதியத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் எஞ்சிய தொகையான ரூபா 2,021.74 மில்லியன் நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 ஜுலை இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 ஜுன் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 மறுப்பு அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையில் அட்டவணை 2 இல் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களைஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஜுலை முதல் 2024 ஜுன் வரைக்குமான காலப்பகுதிக்காக இலங்கை அரசாங்கத்திற்கு (GOSL) ரூபா 5,499.71 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியன் தொகையினை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் பசுமை காலநிலை நிதியம் (GCF) ஆகியவற்றிற்கு இடையே 2017 ஜுன் 07 ஆம் திகதியன்று நிதியளிப்பு செய்யப்பட்ட செயல்பாட்டு உடன்படிக்கை (மானியம்) ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (MMDE) செயற்திட்டத்தினை நிறைவேற்றும் நிறுவனமாகவும் UNDP அமுலாக்கும் நிறுவனமாகவும் இருக்கின்றது. இலங்கையின் உலர் வலயத்திலுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக சில விவசாயிகள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும் | PMUஅலுவலகத்திலிருந்து GCF பெற்றுக்கொள்ளல் தொடர்பில் திட்டவட்டமான உறுதிப்படுத்தல் கடிதமொன்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்த போதிலும், விடயத்திற்குட்பட்ட காலப்பகுதிக்காக திரண்ட பகிர்ந்தளிப்பு அறிக்கை (CDR) மூலம் பணம் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்த முடியும். தற்போது UNDP (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்) இடமிருந்து வீநியோகத்தினை ஆரம்பித்தல் குறித்து கடிதமொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. | நன்கொடையாளர் முகவரியினால் வழங்கப்பட்ட நிதியினைமத்திய வங்கியின் ஊடாக அனுப்பப்பட்டு செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

மற்றும் 2016 ஒக்தோபர் 04 ஆம் திகதிய அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்திற்கிணங்க 2017 யூலை 01 ஆந் திகதி செயற்திட்ட கண்காணிப்பு பிரிவொன்று (MMDE) இன் கீழ் நிறுவப்பட்டது. நிதியளிப்பு செய்யப்பட்ட செயற்பாட்டு உடன்படிக்கையின் (FAA) உட்பிரிவு 3 இன் பிரகாரம், நிதியளிக்கப்பட்ட செயற்பாட்டிற்கு நிதியளித்து உதவுவதற்கும், அதன் நோக்கத்திற்காகவும் ஐ.அ.டொலர் 38.084 பில்லியன் தொகையொன்று அமுலாக்கல் நிறுவனத்தினால் (UNDP) நிறைவேற்றல் நிறுவனத்திற்கு (MMDE) மானிய வடிவில் விடுவிக்கப்படும். கடந்த நான்கு ஆண்டுகளில் (UNDP) இற்கு ரூபா 3,774.17 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 22.23 மில்லியன் தொகையினை பசுமை காலநிலை நிதியம் விடுவித்திருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 வரையிலுமான ரூபா 1,128.09 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 6.96 மில்லியன் மாத்திரம் (MMDE) இற்கு வழங்கப்பட்டிருந்தது மற்றும் ரூபா 2,646.08 இற்கு சமனான ஐ.அ.டொலர் 15.27 மில்லியன் மீதியானது செயற்திட்டத்தின் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு (UNDP) இனால் செலவிடப்பட்டிருந்தது.

மொத்த விடுவிப்புக்களில் 30 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறைவேற்றல் நிறுவனத்திற்கு (MMDE) விடுவிக்கப்பட்ட தொகைக்கு மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டிருந்தமை காரணமாக ஒட்டுமொத்த செயல்திட்டத்தின் நிதி செயலாற்றல் மற்றும் நிதிநிலைமை என்பன பிரதிபலிக்கவில்லை மற்றும் எனது கணக்காய்வு வேலை (MMDE) இனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | UNDP இனால் வழங்கப்பட்ட விநியோக அறிக்கையில் அர்ப்பணிப்புக் கட்டணங்கள் மற்றும் சான்றுபடுத்தப்படாத வேலைகளுடன் தொடர்புடைய ஐ.அ.டொலர 2.3 மில்லியனுக்கு சமனான ரூபா 458.09 மில்லியன் பெறுமதியான பொறுப்புகள் உள்ளடங்கியிருந்தன. எவ்வாறான போதிலும், குறித்த அர்ப்பணீப்பு கட்டணங்கள் மற்றும் சான்றுபடுத்தப்படாத பணிகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | PMU இனால் முன்னெடுக்கப்பட்ட நிர்மாண நடவடிக்கைகள் ஒவ்வொரு ஆண்டினதும் திசெம்பர் 31 ஆந் திகதி முழமையாக செலுத்தப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கான பட்டியல்கள் திசெம்பர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கோரப்படுகின்றன. மேலும்,UNDP (அங்கீகாரமளிக்கும் நிறுவனம்) இனால் பின்பற்றப்படும் நடைமுறைக்கமைய எதுவித ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றின் உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்களின் முறையே கீழ் GCF மற்றும் GOSL இனால் நிதியளிக்கப்பட்ட ரூபா 1,128.09 மில்லியன் மற்றும் ரூபா 1,089.96 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் GCF இடமிருந்தான பண அனுப்பல்கள் மற்றும் GOSL இன் பங்களிப்பு கடந்த 4 வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களுடனான விரிவான பட்டியல்கள் இணைக்கப்படாத போதிலும், உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் PMU இனால் அனைத்து விபரங்களையும் வழங்க முடியும். எதிர்காலத்தில் இவை நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் உருப்படிகளின் கீழ் தேவையான அனைத்து விபரங்களையும் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்திக்கமைய, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தினால் (SLPSAS) கோரப்பட்டால் அல்லது அனுமதியளிக்கப்பட்டால் தவிர்த்து, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாது. எவ்வாறான போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முறையே ரூபா 87.3 மில்லியன் மற்றும் 38.9 மில்லியனான நடைமுறை | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது அந்த நடைமுறை பின்பற்றப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா 48.4 மில்லியனானது செலவினங்களின் வெளியீடு 01 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக வெளியீடு 01 இன் மொத்த செலவினமானது குறித்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட ஆவணத்தின் அத்தியாயம் 69 இன் பகுதி 7 | 2021 இன் ஒருங்கிணைந்த விநியோக அறிக்கையினை அங்கீகரிக்கின்ற போது செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புபட்ட செலவுகளை மாத்திரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் செயலாளர் சான்றுறுதிப்படுத்தியிருந்தார். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்வாறான போதிலும், செயற்திட்ட செலவினம் தொடர்பான விரிவான ஆவணச் சான்றுகள் மற்றும் ஏனைய தரவுகள் இல்லாதிருந்த காரணத்தால் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. | எவ்வித நிபந்தனைகளும் இன்றி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயலாளரினால் ஒருங்கிணைந்த விநியோக அறிக்கை அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதி செயற்பாட்டு உடன்படிக்கையின் (FAA),அட்டவணை இலக்கம் 3 இன் பிரகாரம், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் அனர்த்த முகமைத்துவ அமைச்சு என்பவற்றால் செயற்திட்டம் நிதியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்ட அமுலாக்கமானது நிதி செயற்பாட்டு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து இணை நிதியீட்டத்தினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுக்க வேண்டும். |

இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், ஒட்டுமொத்த செயற்திட்ட அமுலாக்கமானது நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அங்கீகார நிறுவனம் (UNDP) ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்தின் பாதீட்டு ஒதுக்கம் ரூபா 1,000 மில்லியனாக இருந்ததுடன் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்ட செலவினமானது ரூபா 108 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய UNDP இனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 636.8 மில்லியன் செலவினமானது அமைச்சின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவீல்லை. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிகளை செலவினம் செய்ய முன்னர் முறையான அங்கீகாரத்தினை பெறவும். |
| (ஆ) | வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் 2019 யூலை 25 ஆந் திகதிய SC&PMU/Grant/19 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து ருனேூ கணக்கிற்கு ஐ.அ.டொலர் 22.23 மீல்லியன் பெறுமதியான நிதி கிடைத்திருந்த போதிலும், விசேட (டொலர்) செயற்திட்டக் கண்காணிப்ப அலகினால் செயற்திட்டத்திற்காக இலங்கை மத்திய வங்கியில் கணக்கொன்று திறக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திகதியில் GCF இனால் விடுவிக்கப்பட்ட நிதி ஐ.அ.டொலர் 21.6 மில்லியன் மாத்திரம் ஆகும். GCF இன் வழங்கல் நடைமுறையானது, அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் செயல்படுத்தும் நிறுவனத்திற்கு வருமானத்தை அனுப்புவதாகும். அதன் காரணமாக டொலர் கணக்கொன்றினை திறப்பதற்கான அவசியம் இல்லை. | வெளிநாட்டு மானியங்களை கணக்கு வைப்பதற்கு சரியான பொறிமுறையொன்றினை பின்பற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (இ) | FAA இன் உட்பிரிவு 7 இன் பிரகாரம், அறிக்கையிடல், கண்காணிப்பு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன அட்டவணை 04 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். செயற்திட்ட நடவடிக்கைகளினை அறிக்கையிடுவதற்காக, கண்காணிப்பு செய்வதற்காக மற்றும் மதிப்பீடு செய்வதற்காக முறையான செயல் முன்னேற்ற அறிக்கையிடல் பொறிமுறையொன்றினை செயற்திட்டமானது தயாரிக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயல்முன்னேற்ற அறிக்கையினை தயாரிக்க வேண்டும். |

இந்த நோக்கத்திற்காக, செயற்திட்டத்தின் வெளியீடுகள், வெளியீடுகளின் அளவுகள் மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான நேரத் திட்டம் என்பனவற்றை செயற்திட்டம் அடையாளம் காண வேண்டும். இந்த செயற்திட்டத்தின் வெளியீடுகள், பயனாளிகள் மற்றும் பாதீட்டு இலக்குகளின் அடிப்படையில் வருடாந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். PMU மற்றும் UNDP ஆகிய இரண்டு தரப்பினர்களிடமும் விசாரணை செய்த போது முறையான செயல்முன்னேற்ற அறிக்கையொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்ய முடியவில்லை.